தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

1989 ஏப்ரல் 4, செவ்வாய்க்கிழமை

பங்குனி 22, விபவ—திருவள்ளுவர் ஆண்டு 2020

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் டாக்டர் மு. சாத்தையா என்கிற தமிழ்க்குடிமகன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

'' நட்டார்போல் நல்லவை சொலினும் ஒட்டார்சொல்
ஒல்லை உணரப் படும்''.

நண்பர்போல் நடந்துகொண்டு நன்மையானவற்றைச் சொன்னபோதிலும், உள்ளத்தில் பகைமை கொண்டவர் சொல்லும் சொற்களின் உண்மை வடிவம் வெகு விரைவில் உணரப் படும்.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்.

திருக்கழுக்குன்றம் வேதகிரீஸ்வரர் மலைக்குச் செல்ல இழுவை இரயில் அமைக்கும் திட்டம்.

23 (*வினா எண். 124)—திரு. வீ. தமிழ்மணி : மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருக்கழுக்குன்றம் வேதகிரீஸ்வரர் மலைக்குச் செல்ல இழுவை இரயில் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே, திருக்கழுக்குன்றம் வேதகிரீஸ்வரர் திருக்கோயிலின் மலைக்குச் செல்ல இழுவை ரெயில் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனை யில் இல்லை.

திரு. வீ. தமிழ்மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருக்கழுக்குன்றம் மலை மேல் அமைந்திருக்கின்ற வேதகிரீஸ்வரர் திருக்கோயிலுக்கு தினசரி பகல் 12 மணியளவில் இரண்டு பட்சிகள் உணவு உண்பதற்காக பல்லாண்டுகளாக அங்கே வந்து போகின்றன. இந்தக் கண்கொள்ளாக் காட்சியைக் காண் பதற்கு இந்தியாவிலிருந்து மட்டுமல்லாமல், உலக நாடுகளிலே

யிருந்து எல்லாம் யாத்திரிகர்கள், உல்லாசப் பயணிகள் வந்து போகிறார்கள். அவர்களுடைய வசதிக்காக, பக்தர்களுடைய வசதியை முன்னிட்டு, அதிலும் இந்தியாவிலே வட மாநிலங்களிலிருந்து வருகின்ற பக்தர்கள் வயது முதிர்ந்தவர்களாகவே இருக்கின்ற காரணத்தால் அவர்கள் மலை மேல் ஏறிச் சென்று இந்தக் காட்சியைக் காண்பதற்கு இலகுவாக்கும் பொருட்டு, இந்தத் திட்டத்தை அவசியம் செய்வதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி: தலைவர் அவர்களே, ஒரு கோயிலை கோயிலாக வைத்துக் கொள்வது ஒன்று. சுற்றுலா மையமாக்குவது இன்னொன்று. இங்கே இந்தத் திருக்கோயிலில் அந்த இழுவை இரயில் அமைக்கக்கூடிய அளவிற்கு நிதி வசதி இல்லை. அது தவிர, பழனியிலே இருக்கக்கூடிய அளவிற்கு உயரமும் இல்லை. ஆகவே, பயணிகள், பக்தர்கள் இலகுவிலே அங்கு ஏறிச் செல்லக்கூடிய வழி இருக்கிறது. இருந்தாலும்கூட, வயது முதிர்ந்தவர்கள் அங்கே வந்தால், அவர்களைத் தூக்கிச் செல்வதற்கு ஒரு ஏற்பாடும் செய்யப்பட்டிருக்கிறது என்பதனை நான் இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வீ. தமிழ்மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் கோயிலினுடைய இன்றைய வருமானம் ரூ. 2 லட்சத்திற்கும் கூடுதலாக பட்சிகளைக் காண வருகின்றவர்களுடைய டிக்கெட் மூலமாக வருகின்றது. அந்தப் பணத்தைக் கொண்டு தான் தாழக் கோவிலும் புரிபாலனம் செய்யப்படுகிறது. இப்படி இழுவை ரயிலை அரசினுடைய பொறுப்பில் அமைத்து, வசதி செய்து கொடுத்தால், ஆண்டுக்கு சுமார் ரூ. 20 இலட்சத்திற்கும் மேல் நிச்சயமாக வருமானம் வரும். எனவே இப்படிப்பட்ட திட்டத்தை—முன்னுரிமை கொடுத்து—நிறைவேற்றுவதற்கு அரசு முன்வருமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழனி கோவிலில் மூன்று இழுவை ரயில்கள் இருந்தாலும்கூட, அங்கே ஆண்டு வருமானம் ரூ. 20 இலட்சத்தைத் தாண்டவில்லை. இங்கே இழுவை ரயில் அமைக்கின்ற பணியைவிட இந்தக் கோவில் திருப்பணி செய்வதற்காக ஏறத்தாழ ரூ. 43 இலட்சம் அளவில் திட்டமிடப்பட்டிருக்கிறது. இதற்காக ஏறத்தாழ இதுவரை ரூ. 2 இலட்சம் தான் நன்கொடையாகவும் அரசு மானியமாகவும் வசூல் செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே இப்போது இந்த இழுவை ரயில் திட்டத்தை செயல்படுத்த வேண்டுமென்ற எண்ணம் அறங்காவல் துறைக்கு இல்லை என்பதை நான் மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

1989 ஏப்ரல் 4]

திரு. பெ. சீனிவாசன் : தலைவர் அவர்களே, ஆண்டவனை தரிசனம் செய்யச் செல்லும்போது பக்தர்கள் தம்மை வருத்திக் கொண்டு போவதுதான் முறை. அதை விடுத்து ஆண்டவனை எளிதாகப் போய்ச் சேருவதற்கு, சென்று பார்ப்பதற்கு, ஒரு பொழுது போக்கு போல இந்த இழுவை ரயில் தேவைதானா என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே, அதைத்தான் நான் ஏற்கெனவே சொன்னேன். திருக்கோயில் என்பது ஒன்று. சுற்றுலா மையம் என்பது வேறு. ஆனால் சுற்றுலாத் துறையின் மூலமாக அங்கே இழுவை ரயில் பதிலாக 'ரோப்-வே' என்று சொல்லக்கூடிய மின் சக்தியால் இயங்கக்கூடிய ஒரு கயிற்று வழியை நிறுவலாம் என்ற ஒரு யோசனையை சுற்றுலாத் துறை தெரிவித்திருக்கிறது. அங்கே இழுவை ரயிலை செயல்படுத்துவதை விட 'ரோப்வே' என்பதைச் செயல்படுத்தலாமா என்பதும் பரிசீலனையில் இருக்கிறது. இருந்தாலும்கூட, நான் ஏற்கெனவே சொன்னது போல் கோயில் கோயிலாக இருக்க வேண்டுமா அல்லது சுற்றுலா மையமாக ஆக வேண்டுமா என்பதுதான் பிரச்சினை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, இதுபோல் திருச்சி மையத்திலே ராமாயணக் காலத்திலே ஏற்பட்ட "ராக்ஃபோர்ட்" டெம்பிள் இருக்கிறது. அதிலே வேறு எந்த விதமான ரோடு வசதியும் பண்ண முடியாது. இந்த மாதிரி விஞ்ச் போட்டு போவதற்குத் தான் ஒரு வழி இருக்கிறது. பக்கத்திலே ஸ்ரீரங்கம் ஒரு பெரிய யாத்ரீகர் ஸ்தலமாக இருப்பதனாலே எக்கச்சக்கமான கும்பல் வந்துகொண்டிருக்கிறது. அதிலே எங்களைப் போன்ற வயதானவர்களும் அதிகமாக வந்து கொண்டிருக்கிறார்கள். 4 படி ஏறினாலே ஹார்ட் அட்டாக் வந்து நடக்கக் கூடாது என்று டாக்டர்கள் சொல்லிவிடுகிறார்கள். ஆகையினால் அந்த 'ராக் போர்ட்டுக்கு' இந்த மாதிரி ஏதாவது ஏற்பாடு செய்வதற்கு அரசு முன் வருமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தங்களைப் போன்ற வயதானவர்கள் 'சிவனே' என்று வீட்டில் இருந்தால் என்ன என்று சில பேர் கேட்கிறார்கள். (சிரிப்பு).

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே, திருச்சியிலே இருக்கக்கூடிய கோட்டை கோவிலைச் சுற்றி ஏறத்தாழ 6 லட்சம் ரூபாய் செலவிலே சுற்றுலா மையம் விளக்கு வசதி செய்து தந்திருக்கிறது. ஆனால் அந்த விளக்கைப் பராமரிப்பதற்குக் கூட அந்தக் கோவில் இன்னும் முன் வரவில்லை. ஆகவே இந்தச் சூழ்நிலையிலே அங்கே இழுவை ரயில் அமைப்பது பற்றிய ஆலோசனை இல்லை. அங்கேயும் வயோதிகர்கள் மேலே ஏறிச் செல்வதற்கு வாய்ப்பு வசதி இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1989 ஏப்ரல் 4

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேதகிரீஸ்வரர் மலைக்குச் செல்ல இழுவை ரயில் அமைப்பது சம்பந்தமாக இந்தக் கேள்வியில் மலைக்கு போகிற வர்களைச் சுமந்து செல்வதற்கு ஏற்பாடு உண்டு என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இன்றையதினம் மனிதர்கள் ஒவ்வொருவரும் சுதந்திரமாக வாழ்ந்துக் கொண் டிருக்கிற காலத்தில் மனிதனை மனிதன் சுமந்துச் செல்லக் கூடிய இந்த முறையை இந்த அரசு அனுமதித்துக் கொண்டிருக் கிறதா? அதைத் தடை செய்யுமா என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே மனிதர்களை மனிதர்கள் சுமந்து கொண்டிருப்பதை நாம் நாடு முழுவதும் பார்த்துக் கொண்டிருக்கிறோம். ஆகவே இதை அரசு தடை செய்யமுடியாது. மனிதர்களாகவே முன் வந்து அதைச் செய்தால்தான் நன்றாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கோ. பூவராகன் : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, திருக்கழுக்குன்றம் கோவிலிலே அந்தக் கழுகுகள் வருவதையொட்டித்தான் அந்த ஆலயத்திற்கே பெருமை. ஆனால் அவ்வாறு இழுவை ரயில் போடுவதன் மூலம் அங்கேயிருக்கிற சுற்றுப்புறச்சூழல் பாதிக்கப்பட்டு, அந்தக் கழுகுகள் அங்கே வராமல் போய்விடக்கூடிய சந்தர்ப்பம் இருக் கிறது என்றுதான் பல நாள் பரிசீலனை செய்து அதை அங்கே நிறுத்தியிருக்கிறார்கள். எனவே, அதைத் தொடராமல் இருப்பதற்கு அமைச்சர் அவர்கள் முயற்சி எடுப்பார்களா?

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே, இங்கே மதிப்புமிகு உறுப்பினர் திரு. பூவராகன் அவர்களுடைய கருத்தையும் ஏற்று, இப்படிப்பட்ட திட்டம் அங்கே செயல் படுத்த முடியாத நிலையிலே இருக்கிறோம் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

ALONE TRIUMPHS

வட. ஆற்காடு மாவட்டத்தில் வேளாண்மைக் கல்லூரி.

24—(*வினா எண் 24) திரு. பெ.சு. திருவேங்கடம் : மற்றும் திரு.கே பிச்சாண்டி: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டத்தில் வேளாண்மைக் கல்லூரி துவக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது துவக்கப்படும்?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இல்லை